| | | 197 | மதிப்பீடு – அ . கோடிட்ட இடம் | உள்ளே | தனி | FA(b) |
| | | | **ஆ. விடையளி** | உள்ளே | தனி | FA(b) |
| | | | **இ. விரிவான விடை** | உள்ளே | தனி | FA(b) |
| | | 198 | அட்டவணை | உள்ளே | தனி | FA(a) |
| **5** | **மனித உடல்** | | மூளை | உள்ளே | குழு | FA(a) |
| | | 199 | இதயம் | உள்ளே | குழு | FA(a) |
| | | | நுரையீரல் | உள்ளே | குழு | FA(a) |
| | | 200 | சிறுநீரகம் | உள்ளே | குழு | FA(a) |
| | | | இரைப்பை | உள்ளே | குழு | FA(a) |
| | | | கல்லீரல் | உள்ளே | குழு | FA(a) |
| | | 201 | செயல் – பட அட்டை | உள்ளே | குழு | FA(a) |
| | | 202 | செரிமான மண்டலம் | உள்ளே | தனி | FA(a) |
| | | 203 | செரிமான நிகழ்வு | உள்ளே | தனி | FA(a) |
| | | 204 | தெரிந்து கொள்வோமா ! | உள்ளே | குழு | FA(a) |
| | | | செயல் – அட்டவணை | உள்ளே | தனி | FA(b) |
| | | 205 | கோடிட்ட இடம் | உள்ளே | தனி | FA(b) |
| | | | செயல்திட்டம் | உள்ளே | தனி | FA(b) |
| | | 206 | மதிப்பீடு | வெளியே | தனி | FA(a) |
| | | 207 | ஆ. கோடிட்ட இடம் | உள்ளே | தனி | FA(b) |
| | | | இ. பொருத்துங்கள் | உள்ளே | தனி | FA(b) |
| | | | ஈ. விடையளியுங்கள் | உள்ளே | தனி | FA(b) |
| | | | உ. நான் யார் ? | உள்ளே | தனி | FA(b) |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 208 | செயல் | வெளியே | தனி | FA(a) |

**வகுப்பு 5 – அறிவியல் பாடம் 1.**

| பாடம் | பாடத் தலைப்பு | பக்க எண் | செயல்பாடு | வகுப்பு உள்ளே/ வெளியே | தனி/குழு | FA(a) FA(b) |
|---|---|---|---|---|---|---|
| 1 | **பசுமை உலகம்** | 161 | **உன் வீட்டருகில் உள்ள உயிருள்ள காரணிகள் / உயிரற்ற காரணிகளை எழுதி வரச்சொல்லி வகுப்பறையில் சொல்லச் சொல்லுதல்** | உள்ளே | தனி | FA(b) |
| | | 161 | **படத்தில் உனக்குத் தெரிந்த உயிரினங்களைப் பட்டியலிடச் சொல்லுதல்** | உள்ளே | தனி | FA(a) |
| | | 161 | **படத்தில் உனக்குப் பிடித்த உயிரினங்களை வரையச் சொல்லுதல்** | உள்ளே | தனி | FA(a) |
| | | 162 | அட்டவணை செயல்பாடு செய்தல் | வெளியே | தனி | FA(a) |
| | | 163 | **சூலகத்தின் படம், மகரந்தத்தாள் படம் வரைந்து பாகம் குறித்தலை மனவரைபடமாக வரையச் சொல்லுதல்** | உள்ளே | தனி | FA(b) |
| | | 167 | **உனது வீட்டருகில் மற்றும் நீ பார்த்த மரங்களைப் பட்டியலிடச் சொல்லுதல்** | வெளியே | தனி | FA(a) |
| | | 167 | **காற்று மூலம் பரவும் விதைகளை சேகரித்து வரச்சொல்லுதல்** | வெளியே | தனி | FA(a) |
| | | 168 | **நீர் மூலம் பரவும் விதைகளைச் சேகரித்து வரச்சொல்லுதல்** | வெளியே | தனி | FA(a) |
| | | 169 | **வெடித்தல் மூலம் விதை பரவுதலைச் சேகரித்து வரச்சொல்லுதல்** | வெளியே | தனி | FA(a) |
| | | 171 | **சேகரித்து வரப்பட்ட விதைகளைக்** கொண்டு **“ விதைக்கண்காட்சி “ அமைத்தல்** | உள்ளே | குழு | FA(b) |
| | | 166 | **உலக வரைபடத்தில் விதைகள் தோன்றிய நாடுகளைக் குறிக்கச் செய்தல்** | உள்ளே | தனி | FA(b) |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **2** | **விலங்குகளின் வாழிடங்கள்** | 176 | **உனக்குத் தெரிந்த சில விலங்குகளின் படங்களில் ஒன்று வரைக** | உள்ளே | தனி | FA(a) |
| | | 182 | அருகிலுள்ள உயிரியல் பூங்கா (அ) சரணாலயத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லுதல் | வெளியே | குழு | FA(a) |
| | | | விலங்குகளின் படங்களைச் சேகரித்து வரச்சொல்லுதல் | வெளியே | தனி | FA(a) |
| | | | மாணவர்கள் தங்களை ஒவ்வொரு விலங்காகப் பாவித்து நடித்துக் காட்டுதல் | உள்ளே | தனி | FA(a) |
| | | | வீட்டருகிலுள்ள விலங்குகளின் பெயர்களை எழுதி வரச் சொல்லுதல் | வெளியே | தனி | FA(a) |
| | | | காடுகள் அழிக்கப்படுவதையும், பாதுகாக்கப்படுவதையும் பற்றி பட்டிமன்றம் நடத்துதல் | உள்ளே | குழு | FA(a) |
| | | 181 | **விலங்குகளின் ………… கருத்தை அட்டவணைப்படுத்துதல் (புத்தகச் செயல்பாடு)** | உள்ளே | தனி | FA(b) |
| **3** | **வண்ணத்துப்பூச்சியும் தேனீக்களும்** | 186 | **வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை சுழற்சி** | உள்ளே | குழு | FA(a) |
| | | 187 | **முதல்பருவம், இரண்டாம் பருவம், மூன்றாம் பருவம், நான்காம் பருவம்** | உள்ளே | குழு | FA(a) |
| | | 187 | **இந்தியாவில் அஸ்ஸாம் மற்றும் சிக்கிம் மாநிலங்கள் வண்ணத்துப்பூச்சிகளி ன் சொர்க்கம். பியூகினி நாட்டில் காணப்படும் அலெக்ஸாண்டிரா குயின் உலகிலேயே மிகப்பெரிய வண்ணத்துப்பூசி } தகவல் துளிகள்** | உள்ளே | குழு | FA(b) |
| | | 188 | **செய்துபார். ஆசிரியர் உதவியுடன் செய்து கற்றல்** | வெளியே | குழு | FA(a) |
| | | | **தகவல் துளிகள்** | உள்ளே | குழு | FA(a) |
| | | 189 | **தேனீக்கள் சமுதாயப்பூச்சிகள்** | உள்ளே | குழு | FA(a) |
| | | | **தேன் கூட்டில் மூன்று வகையான தேனீக்கள் காணப்படுகின்றன** | வெளியே | குழு | FA(a) |
| | | 190 | **அறிந்து கொள்வோமா!** | வெளியே | தனி | FA(a) |
| | | | **வேலைக்கார தேனீக்கள் தேனீக்களில் காணப்படும் சில இனங்கள்** | வெளியே | குழு | FA(a) |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 190 | தேனின் பயன்கள் (ஆசிரியர் உதவியுடன்) செய்து கற்றல் | உள்ளே | குழு | FA(a) |
| | | 191 | தேனின் கூட்டுப்பொருள்கள் – அறிந்து கொள்வோமா! | உள்ளே | தனி | FA(b) |
| | | | தேனி வளர்ப்பு | வெளியே | குழு | FA(a) |
| | | 194 | செயல்திட்டம் | வெளியே | தனி | FA(a) |
| 4 | **மனித மூளை மற்றும் புலன் உறுப்புகள்** | 195 | **உற்றுநோக்கல் (**Observation and Activity**)** **உயிரியல் ஆய்வகத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று மாதிரிகளைக் காண்பித்து உடல் உறுப்புகளைக் கூறச் செய்தல்** | வெளியே | தனி | FA(a) |
| | | 196 | உற்றுநோக்கல் (Observation) மண்டை ஓட்டை மாணவர்களுக்கு காண்பித்துப் பாகங்களைக் கூறச்செய்தல் | உள்ளே | தனி | FA(a) |
| | | 197 | பங்கேற்று நடித்தல் (Role Play) மாணவர்களிடம் மூளையின் பகுதிகளின் மாதிரிகளையோ அல்லது துண்டுச் சீட்டில் எழுதிக்கொடுத்தோ அதன் பணிகளைப் பங்கேற்று நடிக்கச் செய்தல் | உள்ளே | தனி | FA(a) |
| | | 198 | மின் அட்டைகள் (Flash Cards) வாகன விபத்துக்கள் சார்ந்த படங்களை (Flash Cards) ஒரு வட்டத்தில் வைத்தும் அடுத்த வட்டத்தில் பாதுகாப்பு முறைகளை வைத்து மாணவர்களைப் பொருத்தச் செய்தல் | உள்ளே | குழு | FA(a) |
| | | 198 | தலைப் பாதுகாப்பு – கலந்துரையாடல் | உள்ளே | குழு | FA(a) |
| | | 201 | மணத்தை பிரித்தறியும் செயல் | வெளியே | குழு | FA(a) |
| | | 201 | சுவை அறிதல் | உள்ளே | தனி | FA(b) |
| | | 199 to 203 | **விவாதம் (**Debate) **மாணவர்களை தன் உறுப்புகளாகப் பாவித்து அதைப்பற்றி விவாதம் செய்தல்** | உள்ளே | குழு | FA(a) |
| | | 197 | **கொடுக்கப்பட்ட படிவத்தில் பாகங்களைக் குறி மூளையின் படம்** | உள்ளே | தனி | FA(b) |
| | | 199 to 203 | **மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு புலன் உறுப்பின் படத்தைச் சேகரித்து அதன் பணிகளை** | வெளியே | குழு | FA(b) |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | **அட்டவணைபடுத்தச் செய்தல்** | | | |
| | | | **கூடுதல் வினாக்கள்** | | | |
| | | | **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** | | | |
| | | | **1. மனிதனின் நினைவாற்றலின் மையமாகச் செயல்படுவது …………..**<br>**(அ) சிறுமூளை (ஆ) பெருமூளை**<br>**(இ) முகுளம் (ஈ) தண்டுவடம்** | உள்ளே | தனி | FA(b) |
| | | | **2. பார்வை உறுப்பு …………..**<br>**(அ) கண் (ஆ) காது**<br>**(இ) மூக்கு (ஈ) தோல்** | | | |
| | | | **கோடிட்ட இடங்களை நிரப்புக**<br>**1. சிறுமூளை பெருமூளையின் ………….. உள்ளது.**<br>**2. மூளை ………….. இயக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.**<br>**3. கண்கள் ………….. குழிக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.**<br>**4. நம் நாவின் மேற்பரப்பில் ………….. மிகுதியாக உள்ளன.**<br>**5. தோல் உடல் ………….. கட்டுப்படுத்துகிறது.** | உள்ளே | தனி | FA(b) |
| | | | **பொருத்துக**<br>**1. மண்டை ஓடு – செவியுணர் நரம்பு**<br>**2. காது – மூளை**<br>**3. கண் – தூசியை தடுத்தல்**<br>**4. மூக்கு – தொடு உணர்வு**<br>**5. தோல் – வைட்டமின் A** | உள்ளே | தனி | FA(b) |
| | | | **மாணவர்களுக்குப் புலன் உறுப்புகளைப் பற்றி வினாடி வினா நிகழ்த்துதல்** | உள்ளே | தனி | FA(a) |
| **5** | **தாவரவியல் பூங்கா** | 209 | வீடுகட்ட பயன்படும் மரங்கள் | வெளியே | குழு | FA(b) |
| | | | வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் | வெளியே | குழு | FA(b) |
| | | | கலைப் பொருட்கள் | வெளியே | குழு | FA(b) |
| | | | உணவாகப் பயன்படும் தாவரங்கள் | வெளியே | குழு | FA(b) |



www.TeacherTN.com

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வில்லோ மரம் பயன்பாடு | வெளியே | குழு | FA(b) |
| | | | களப்பயணம் | வெளியே | குழு | FA(a) |
| | | | செயல்திட்டம் | வெளியே | குழு | FA(b) |
| | | 210 | இலவங்கப்பட்டை, ஏலக்காய், கிராம்பு, ஜவ்வாது, சந்தனம் மற்றும் வாசனைப் பூக்கள் | வெளியே | குழு | FA(b) |
| | | 212 | மருத்துவ குணமிக்கத் தாவரங்கள் | வெளியே | குழு | FA(a) |
| | | 215 | நோய் தீர்க்கும் மருந்துகளாகப் பயன்படும் பூக்களை அறிந்துவரச் சொல்லுங்கள் | வெளியே | குழு | FA(a) |
| | | 216 | வகைப்படுத்துவோமா! | உள்ளே | தனி | FA(b) |



www.TeacherTN.com

## 4. மதிப்பீட்டு செயல் வழிகாட்டி வகுப்பு 1 பாடம் 1

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வாங்க மரத்தடிக்குப் போவோம்.** |
| 2. | செயல் 1. | : | பக்கம் 121 முழு வகுப்புச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | பாடல் பாடுதல். |
| 6. | நோக்கம் | : | விலங்குகள், பறவைகள் வாழும் இடங்களைத் தெரிந்து கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | வில்லு |
| 8. | செய்முறை | : | வில்லுப் பாட்டு பாடுதல்<br>“வண்ணக்கிளியே வீடெங்கே?<br>மரத்துப் பொந்தே என் வீடு<br>தூக்கணாங்குருவி வீடெங்கே?<br>தொங்குது மரத்தில் என் வீடு” |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் வில்லுப்பாட்டின் மூலம் விலங்குகள் மற்றும் பறவைகளின் வாழிடங்களைத் தெரிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் கூர்சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வாங்க மரத்தடிக்குப் போவோம்.** |
| 2. | செயல் 2 | : | முழு வகுப்புச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | கலந்துரையாடல். |
| 6. | நோக்கம் | : | விலங்குகள், பறவைகள் வாழும் இடங்களைத் தெரிந்து கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | விலங்குகள் மற்றும் பறவைகளின் முகமூடிகள் |
| 8. | செய்முறை | : | முகமூடி அணியச் செய்து, ஆசிரியர் மாணவர்களுடன் விலங்குகள் மற்றும் பறவைகளின் வாழிடம் பற்றி கலந்துரையாடுதல் |
| 9. | செயல் முடிவு | : | கலந்துரையாடலின் மூலம் விலங்குகள் மற்றும் பறவைகளின் வாழ்விடங்களை மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 10. | வாழ்வியல் திறன் | : | தன்னைப் பிறர் நிலையில் வைத்துப் பார்க்கும் திறன் வளர்க்கப்படுகிறது. |
| 1. | பாடத் தலைப்பு | : | **வாங்க மரத்தடிக்குப் போவோம்.** |
| 2. | செயல் 3 | : | பக்கம் 123 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | கலந்துரையாடல். |
| 6. | நோக்கம் | : | மரம், மரத்தில் இருக்கும் விலங்குகள், பறவைகள், பூச்சிகள், காய்கனிகள், மரத்தின் வேர் பற்றி அறிதல், மரத்தின் தன்மை அறிதல். |
| 7. | தேவையான பொருள் | : | வகுப்பறைக்கு வெளியே இருக்கும் பலவகையான மரங்கள். |
| 8. | செய்முறை | : | மாணவர்களை 5 குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.<br>**முதல் குழு** – மரத்தைத் தொட்டு எப்படி இருக்கும் என்பதை பேசுதல்.<br>**இரண்டாம் குழு** - மரத்தில் இருக்கும் விலங்குகள், பூச்சிகள் பெயரை அறியச் செய்தல்.<br>**மூன்றாம் குழு** - மரத்தில் உள்ள காய்கனிகளின் பெயரை அறியச் செய்தல்.<br>**நான்காம் குழு** - மரத்தின் பூக்கள் மற்றும் நிறம் அறியச் செய்தல்.<br>**ஐந்தாம் குழு** - மரத்தின் வேர் பற்றிப் பேசுதல். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் மரத்தின் தன்மை, மரத்தில் இருக்கும் விலங்குகள், பறவைகள், பூச்சிகள், காய்கனிகள், மரத்தின் வேர் பற்றித் தெரிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் கூர்சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | வாங்க மரத்தடிக்குப் போவோம். |
| 2. | செயல் 4 | : | பக்கம் 126 தனிச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டுமுறை. |
| 6. | நோக்கம் | : | மரங்கள் மற்றும் இலைகளை அறிதல். |
| 7. | தேவையான பொருள் | : | மரங்கள் ஒட்டப்பட்ட அட்டைகள் மற்றும் அதற்குச் சரியான இணையான இலைகள். |
| 8. | செய்முறை | : | மாணவர்களிடம் மரங்களின் படங்கள் ஒட்டப்பட்ட அட்டைகள் மற்றும் அதற்கு இணையான இலைகள் கொண்ட அட்டைகளைக் கொடுத்துச் சரியான மரத்தை இலையோடு பொருத்தி விளையாடுதல். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் மரங்களின் பெயர் மற்றும் இலைகளைக் கண்டறிகின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வாங்க மரத்தடிக்குப் போவோம்.** |
| 2. | செயல் 5 | : | பக்கம் 127 தனிச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 15 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டுமுறை. |
| 6. | நோக்கம் | : | பழங்களின் பெயர் மற்றும் நிறத்தைத் தெரிந்து கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | உண்மையான பழங்கள், மின்னட்டைகள் (Flash Cards) பல நிறங்களில் உள்ள பழங்கள் உடைய வரைபடத்தாள் (chart) |
| 8. | செய்முறை | : | ஆசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும் இரண்டு பழங்கள் அல்லது மின்னட்டைகளில் ஒட்டப்பட்ட இரண்டு பழ அட்டைகளைப் பிரித்துக் கொடுத்து பழங்களை மாணவர்கள் வரைபடத்தாளில் (chart) ஒப்பிட்டு காண்பிக்கச் செய்தல். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் பழங்களின் பெயர் மற்றும் அதன் நிறத்தைத் தெரிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் கூர்சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வாங்க மரத்தடிக்குப் போவோம்.** |
| 2. | செயல் 6 | : | பக்கம் 128 தனிச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 15 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | கைவேலை |
| 6. | நோக்கம் | : | இலைகளின் வகைகளை அறிதல். |
| 7. | தேவையான பொருள் | : | பல வகையான இலைகள், தூரிகை (Brush). |
| 8. | செய்முறை | : | 1. இலையை இரண்டு நாட்கள் முன்னரே தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். அதை மாணவர்களிடம் கொடுத்து தூரிகையைக் கொண்டு தேய்த்தால், மேல் இருக்கின்ற திசுக்கள் நீங்கி நரம்புகள் உள்ள இலை கிடைக்கும்.<br>2. மாணவர்களுக்குப் பிடித்த இலையைக் கொண்டு பூ வடிவம் செய்யலாம்.<br> |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் இலைகளின் வகைகளை அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது. |

**பாடம் 2**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **எனக்கு அணில் பிடிக்கும்.** |
| 2. | செயல் 7 | : | பக்கம் 128 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டு முறை |
| 6. | நோக்கம் | : | காட்டில் வாழும் விலங்குகள், வீட்டில் வாழும் விலங்குகள் மற்றும் பூச்சிகளின் பெயர்களை பாடல் மூலம் கற்றுக் கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | நாய், பூனை, பசு, ஆடு, மாடு, சிங்கம், புலி, யானை, குரங்கு, ஈ, கொசு, தேனீ, எறும்பு, தும்பி, வண்ணத்துப் பூச்சிகள் ஒட்டப்பட்ட மின்னட்டைகள் மற்றும் நூல். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 8. | செய்முறை | : | மேலே குறிப்பிட்டுள்ள படங்களை வரைபடத்தாளில் ஒட்ட வேண்டும். அதில் துளையிட்டு நூல் கோர்த்து மாணவர்களின் கழுத்தில் தொங்க விட வேண்டும். வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்று ஆசிரியர் மாணவர்களை வட்டமாக நிற்க வைத்து பாட்டுப் பாட வேண்டும். பாடும் பொழுது வீட்டு விலங்குகள் என்று சொன்னால் நாய், பூனை, பசு, ஆடு, மாடு இந்த விலங்குகள் அட்டையுள்ள மாணவர்கள் வட்டத்தின் நடுவில் வரவேண்டும். இப்படி காட்டு விலங்குகள் மற்றும் பூச்சிகள் என விளையாட்டைத் தொடரவேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | விளையாட்டின் மூலம் மாணவர்கள் எளிதில் வீட்டு, காட்டு விலங்குகள் மற்றும் பூச்சிகளைத் தெரிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் கூர்சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்கிறார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **எனக்கு அணில் பிடிக்கும்.** |
| 2. | செயல் 8 | : | பக்கம் 133 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | கலந்துரையாடல் |
| 6. | நோக்கம் | : | பறவைகளின் பெயர் பற்றித் தெரிந்து கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | பறவைகளின் படங்கள் ஒட்டப்பட்ட மின்னட்டைகள். |
| 8. | செய்முறை | : | ஆசிரியர்கள் மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து கீழ்க்கண்ட கேள்விகள் மூலம் கலந்துரையாடச் செய்யவும்.<br>1. எத்தனை கிளிகள் படத்தில் உள்ளன?<br>2. மரப்பொந்தில் இருக்கும் பறவையின் பெயர் என்ன ?<br>3. எத்தனை வாத்துகள் தண்ணீரில் நீந்துகின்றன ?<br>4. காலையில் கூவும் பறவை படத்தில் உள்ளதா ?<br>5. எத்தனை கோழிக் குஞ்சுகள் உள்ளன ?<br>6. படத்தில் மயில் உள்ளதா ?<br>7. மரத்தைக் கொத்திக் கொண்டு இருக்கும் பறவையின் பெயர் என்ன ?<br>இப்படி ஆசிரியரே சில கேள்விகளைத் தயார் செய்தும் கேட்கலாம். |
| 9. | செயல் முடிவு | : | உற்று நோக்கி பதில் சொல்வது மூலம் மாணவர்கள் அனைவரும் பறவைகளின் பெயர்களைத் தெரிந்து கொள்கின்றனர். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் கூர்சிந்தனைத் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **எனக்கு அணில் பிடிக்கும்.** |
| 2. | செயல் 9 | : | பக்கம் 142 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்று நோக்கல் |
| 6. | நோக்கம் | : | பறவைகளை அறிந்து கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | பறவைகளின் படங்கள் ஒட்டப்பட்ட மின்னட்டைகள், பறவைகளின் சரியான இறகுகள் கொண்ட அட்டைகள். |
| 8. | செய்முறை | : | ஆசிரியர்கள் மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு மாணவராக வரச்செய்து ஒரு அட்டையை எடுக்கச் செய்ய வேண்டும். ஆசிரியர் பறவைகள் என்று சொல்ல, மாணவர்கள் பறவைகள் ஒட்டப்பட்ட அட்டை உள்ள மாணவர்கள் சேர்ந்து குழுவாக நிற்கவேண்டும். இவ்வாறு இறகுகள் என்று சொல்ல, பறவைகளின் இறகு ஒட்டப்பட்ட அட்டை உள்ள மாணவர்கள் சேர்ந்து குழுவாக நிற்கவேண்டும். இறுதியாக, ஆசிரியர்கள் இறகோடு இணைப்போமா என்று கூற அந்தந்தப் பறவைகளின் இறகுகளோடு இணைந்து நிற்கச் செய்தல் வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் அனைவரும் பறவைகளை அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் கூர்சிந்தனைத் திறன் வளர்கிறது. |

**பாடம் 3**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **என்னைப் பற்றி.** |
| 2. | செயல் 10 | : | பக்கம் 145 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்று நோக்கல் |
| 6. | நோக்கம் | : | உடல் உறுப்புகளை அறிந்து கொள்ளுதல். |
| 7. | தேவையான பொருள் | : | உடல் உறுப்புகள் ஒட்டப்பட்ட மின்னட்டைகள். |
| 8. | செய்முறை | : | ஆசிரியர்கள் மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒரு குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவனும் உடல் உறுப்புகளை தனித்தனியாகக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். அடுத்த குழுவிலுள்ள மாணவர்கள் உடல் |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| | | | உறுப்புகளை அடையாளம் கண்டு கூற வேண்டும். |
| **9.** | செயல் முடிவு | **:** | மாணவர்கள் அனைவரும் உடல் உறுப்புகளை அறிந்து கொள்கின்றனர். |
| **10.** | வாழ்வியல் திறன் | **:** | மாணவர்கள் தன்னைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். |

| | | | |
|---|---|---|---|
| **1.** | பாடத் தலைப்பு | **:** | **என்னைப் பற்றி.** |
| **2.** | செயல் 11 | **:** | பக்கம் 145 தனிச் செயல்பாடு. |
| **3.** | மதிப்பெண் | **:** | 10 |
| **4.** | கால அளவு | **:** | 20 நிமிடம். |
| **5.** | கற்றல் மதிப்பீட்டு முறை | **:** | சோதனை செய்தல் |
| **6.** | நோக்கம் | **:** | நாவினால் அறுசுவைகளைப் பற்றி அறிதல். |
| **7.** | தேவையான பொருள் | **:** | சாக்லெட், லட்டு, உப்பு, புளி, மிளகாய், பாகற்காய், வாழைப்பூ , வேப்ப இலை. |
| **8.** | செய்முறை | **:** | ஆசிரியர்கள் மேலே குறிப்பிட்டுள்ள பொருட்களைத் தனித்தனி தட்டில் வைத்து 1,2,3…. என குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு மாணவனாக அழைத்து பொருட்களைச் சுவைக்கச் செய்து சுவைகளைக் கூறச் சொல்லுதல். |
| **9.** | செயல் முடிவு | **:** | மாணவர்கள் அனைவரும் அறுசுவைகளைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்கின்றனர். |
| **10.** | வாழ்வியல் திறன் | **:** | மாணவர்களிடம் முடிவெடுக்கும் திறன் வளர்கிறது. |

**மதிப்பீட்டு செயல் வழிகாட்டி வகுப்பு 2 பாடம் 1**

| | | | |
|---|---|---|---|
| **1.** | பாடத் தலைப்பு | **:** | **மரம், செடி, கொடி.** |
| **2.** | செயல் 1 | **:** | பக்கம் 130 குழுச் செயல்பாடு. |
| **3.** | மதிப்பெண் | **:** | 10 |
| **4.** | கால அளவு | **:** | 10 நிமிடம். |
| **5.** | கற்றல் மதிப்பீட்டு முறை | **:** | உற்று நோக்கல் |
| **6.** | நோக்கம் | **:** | தாவரங்களை மரம், செடி, கொடி என வேறுபடுத்தி அறிதல். |
| **7.** | தேவையான பொருள் | **:** | கிளையுடன் கூடிய இலைகள் செடி, கொடிகள். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 8. | செய்முறை | : | கிளையுடன் கூடிய இலைகள், செடி மற்றும் கொடிகள் ஒவ்வொன்றிலும் 4 அல்லது அதற்கு மேல் சேகரித்து வைத்து அதைச் சுற்றி வட்டமிடுக. அதைச் சுற்றி மாணவர்களை வட்டமாக சுற்றி வரச்செய்க. ஆசிரியர் மரம் என்று கூற ஓடிக்கொண்டிருக்கும் மாணவர் மரத்தின் இலைகளை எடுக்க வேண்டும். சரியாக எடுத்த மாணவரை ஆசிரியர் பாராட்டுத் தெரிவித்து மதிப்பெண் இட வேண்டும். இவ்வாறு செடி, கொடி என்று விளையாட்டைத் தொடர வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் அனைவரும் மரம், செடி, கொடிகளின் இலைகள் மற்றும் கிளைகளைக் கொண்டு மரம், செடி, கொடிகளை வேறுபடுத்தி அறிகின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் கூர்சிந்தனைத் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **மரம், செடி, கொடி.** |
| 2. | செயல் 2 | : | பக்கம் 130 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்று நோக்கல் |
| 6. | நோக்கம் | : | மரம், செடி, கொடிகளை இனங்கண்டறிதல். |
| 7. | தேவையான பொருள் | : | மரம், செடி, கொடிகளிலிருந்து பெறப்பட்ட காய்கள். |
| 8. | செய்முறை | : | மரம், செடி, கொடிகள் ஒவ்வொன்றிலும் 4 அல்லது அதற்கு மேல் சேகரிக்கப்பட்ட காய்களை வகுப்பறையில் மேசை மீது வைக்கவும். வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும், ஒரு குழுவில் உள்ள மாணவர் ஒருவர் மரம் என்று கூற, அடுத்த குழுவில் உள்ள முதல் மாணவர் மரத்தின் காய் ஒன்றினை எடுத்து மேலே தூக்கிக் காண்பிக்க வேண்டும். சரியாக எடுத்த மாணவருக்கு கைதட்டி பிற மாணவர்கள் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு செடி, கொடி என்று விளையாட்டைத் தொடர வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் அனைவரும் மரம், செடி, கொடிகளின் காய்களை அறிந்து கொள்வதன் மூலம் மாணவர்கள் மரம், செடி, கொடிகளை இனம் கண்டறிகின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் கூர்சிந்தனைத் திறன் வளர்கிறது. |



www.TeacherTN.com

**பாடம் 2**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **பறக்கலாம் வாங்க.** |
| 2. | செயல் 3 | : | பக்கம் 152 தனிச்நபர் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டு |
| 6. | நோக்கம் | : | பறவைகளின் பெயர்களை அறிதல். |
| 7. | தேவையான பொருள் | : | பறவைகளின் பொம்மைகள். |
| 8. | செய்முறை | : | பறவைகளின் பொம்மைகளை வகுப்பறையில் மேசை மீது வைக்கவும். ஆசிரியர் வகுப்பிலுள்ள ஒரு மாணவரிடம் பறவையின் பெயரைக் கூறி அந்த குறிப்பிட்ட பறவையின் பொம்மையை எடுத்து வரச் செய்தல். அந்த குறிப்பிட்ட பறவையின் சத்தத்தை ஒலிக்கச் செய்தல். சரியாக எடுத்த மாணவருக்கு கைதட்டி பிற மாணவர்கள் பாராட்டு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு மாணவராக செயல்பாட்டைத் தொடர வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் அனைவரும் பறவைகளை அடையாளம் கண்டு கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களிடம் பிற உயிர்களிடத்து அன்பு செலுத்தும் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **பறக்கலாம் வாங்க.** |
| 2. | செயல் 4 | : | பக்கம் 153 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விடுகதை |
| 6. | நோக்கம் | : | விடுகதை மூலம் பறவைகளை அடையாளம் காணல். |
| 7. | தேவையான பொருள் | : | புதிர்கள் அடங்கிய அட்டைகள். |
| 8. | செய்முறை | : | மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து முதல் குழுவில் உள்ள மாணவர் ஒருவர் கீழ்க்கண்ட புதிர்களில் ஒன்றைச் சொல்ல, அடுத்த குழுவில் உள்ள ஒருவர் புதிருக்கு விடை சொல்ல வேண்டும். சரியாக விடை கூறிய குழுவிற்கு மதிப்பெண் இடவேண்டும். இவ்வாறு தொடர்ந்து ஒவ்வொரு மாணவராக செயல்பாட்டைத் தொடர |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். அதிக மதிப்பெண் பெற்ற குழு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு பாராட்டுகள் தெரிவிக்கப்படவேண்டும்.<br>1. எனது நிறம் பச்சை. கீ, கீ எனக் கத்துவேன். எனது அலகின் நிறம் சிவப்பு. நான் யார்?<br>2. நான் குவா குவா எனக் கத்துவேன். என் கால்கள் சவ்வால் இணைந்தவை. எனவே நான் வேகமாக நடக்க முடியாது. ஆனால் நீந்துவேன். நான் யார்?<br>3. எனது நிறம் கருப்பு. கா, கா, எனக் கத்துவேன். நான் யார்?<br>4. எனது நிறம் வெள்ளை. என் கால்கள் நீளமானது. மீன் எனக்கு பிடித்தமான உணவு. நான் யார்? |
| 9. | | : | மாணவர்கள் அனைவரும் பறவைகளை இனம் கண்டு கொள்கின்றனர். மேலும் அவற்றின் உணவையும், ஒலியையும் ஒன்று சேர்த்து அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் சிந்தனைத் திறன் வளர்ந்து தாங்கள் அறிந்தவற்றை தொடர்புபடுத்தி பேசக் கற்றுக் கொள்கிறார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **பறக்கலாம் வாங்க.** |
| 2. | செயல் 5 | : | பக்கம் 154 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டு |
| 6. | நோக்கம் | : | பறவைகளின் உணவுகளைக் கண்டறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | முக மூடிகள், மின் அட்டைகள். |
| 8. | செய்முறை | : | மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவில் உள்ள மாணவர்களுக்குக் கொக்கு, கிளி போன்ற பறவைகளின் முக மூடிகளை ஆசிரியர் தயாரித்து மாட்டி விட வேண்டும். அடுத்த குழுவில் உள்ள மாணவர்களின் கையில் பறவைகள் சாப்பிடும் உணவுகள் முறையே பூச்சி, மீன், பழம் அடங்கிய மின் அட்டைகளைக் கொடுக்கவும். முதல் குழுவில் உள்ள மாணவர்களை இரண்டாம் குழுவில் உள்ள மாணவர்களோடு சரியாகப் பொருந்தி நிற்கச் செய்யவும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் அனைவரும் பறவைகளின் உணவுகளை அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் குழுவில் ஒற்றுமையாக இருப்பதை அறிந்து கொள்கிறார்கள். |



www.TeacherTN.com

**பாடம் 3**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **விலங்குகள்.** |
| 2. | செயல் 6 | : | பக்கம் 155 குழுச் செயல்பாடு. |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம். |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டு |
| 6. | நோக்கம் | : | விலங்குகளைப் பற்றி அறிதல். |
| 7. | தேவையான பொருள் | : | விலங்குகளின் முக மூடிகள். |
| 8. | செய்முறை | : | ஆசிரியர் மாணவர்களை குழுக் குழுவாகப் பிரித்து ஒவ்வொரு மாணவர்களுக்கும் முகமூடிகளைக் கொடுக்க வேண்டும். மாணவர்களுக்கு ஓட்டப் பந்தயம் வைத்து முதலில் வரும் முகமூடி மாணவனுக்கு கைதட்டிப் பாராட்டு தெரிவிக்க வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் அனைவரும் பல விலங்குகளைப் பற்றி அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் ஒற்றுமையாக இருக்கப் பழகுகிறார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **விலங்குகள்** |
| 2. | செயல் 7. | : | 167 குழுச் செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | விளையாட்டு முறை |
| 6. | நோக்கம் | : | விலங்குகளைக் கண்டறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | விலங்குகளின் தலைமாதிரிபடம், வால் மாதிரி படம் |
| 8. | செய்முறை | : | மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, ஒரு குழுவைச் சேர்ந்த மாணவர்களின் கழுத்தில் படத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலங்குகளின் பட மாதிரிகளை நூல் கொண்டு இணைத்து பதக்கமாக மாட்டித் தொங்க விடவும். அடுத்த குழுவைச் சேர்ந்த மாணவர்களின் இடுப்பில் கொடுக்கப்பட்டுள்ள விலங்குகளின் வால்களின் மாதிரிகளை நூலால் கட்டித் தொங்க விடவும். இரு குழுக்களைச் சேர்ந்த மாணவர்களைச் சரியாகப் பொருந்தி நிற்கச் செய்யவும். |
| 9. | செயல் முடிவு | : | விலங்குகளைக் கண்டறிகின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | பாராட்டுணர்வை மாணவர்கள் பெறுகிறார்கள் |



www.TeacherTN.com

**பாடம் 4**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நமது உடல்** |
| 2. | செயல் 8 | : | பக்கம் 171 குழுச் செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | சோதனை செய்தல் |
| 6. | நோக்கம் | : | உடலின் உறுப்புகள் பற்றி அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | கண், காது, மூக்கு வாய், நாக்கு படங்கள், இனிப்பு, கசப்பு, காரப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள் |
| 8. | செய்முறை | : | கண்களை மூடச் செய்து பொருட்கள் தெரிகிறதா என மாணவர்களை கேட்டல். இரண்டு காதுகளையும் விரலால் மூடச் செய்து நான் பேசுவது கேட்டதா என்பதை அறிதல். வாசனை திரவியங்களை முகரச் செய்து மூக்கு வாசம் அறிகிறதா என்பதை அறிதல். சுவையை அறிய இனிப்பு, கசப்பு, காரம் போன்ற பொருட்களை மாணவர்களின் விரலால் ஒவ்வொன்றாகத் தொடச் செய்து நாக்கால் சோதித்து அறியச் செய்து, என்ன தன்மை உடையது என மாணவர்களைக் கேட்டு அறிதல். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் ஐம்புலன்களைப் பற்றித் தெரிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் தன்னைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள் |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நமது உடல்** |
| 2. | செயல் 9 | : | பக்கம் 176 தனிச் செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்று நோக்கல் |
| 6. | நோக்கம் | : | மூளையின் வேலையை அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | மூளை படம், மாதிரி |
| 8. | செய்முறை | : | மூளை படத்தை சுவரில் ஒட்ட வைத்து மாணவர்களை உற்றுநோக்கச் செய்யவும். நம் உடலின் அனைத்து செயல்களையும் மூளை ஒருங்கிணைக்கிறது என அனைத்து மாணவர்களுக்கும் விளக்கி கூறுதல். |
| 9. | செயல் முடிவு | : | உடல் உறுப்புகள் அனைத்தும் வேலை செய்ய வைப்பது மூளைதான் என உணர்கின்றனர் |
| 10. | வாழ்வியல் திறன் | : | காரண காரியங்களை தொடர்புபடுத்த மாணவர்கள் தெரிந்து கொள்கிறார்கள் |



www.TeacherTN.com

**மதிப்பீட்டு செயல் வழிகாட்டி வகுப்பு 3 பாடம் 1**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வண்ண வண்ணத் தோட்டம்** |
| 2. | செயல் 1 | : | பக்கம் 157 தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | பங்கேற்று நடித்தல் |
| 6. | நோக்கம் | : | வேரில் மற்றும் தண்டில் உணவைச் சேமிக்கும் தாவரங்கள் எவையென வேறுபடுத்தி அறிதல் |
| 7. | தேவையான பொருள்கள் | : | ---------. |
| 8. | செய்முறை | : | 1. ஒவ்வொருவரும் தங்களை மஞ்சள், இஞ்சி,, உருளை, கேரட், பீட்ருட் மற்றும் முள்ளங்கி போல கற்பனை செய்தல் வேண்டும்.<br>2. ஒவ்வொருவரும் தான் தெரிவு செய்த தாவரம் செடியின் எந்தப் பகுதியில் கிடைக்கும் அது எந்த வகையைச் சார்ந்தது அதன் நிறம் போன்ற கேள்விகளுக்குப் பதில் தேடி கூற வேண்டும்.<br>3. வேறு கூடுதல் தகவல்களையும் திரட்ட ஊக்குவிக்கப்பட வேண்டும்.<br>4. வகுப்பில் அம்மாணவர் தன்னை அத்தாவரம் போல் பாவித்து நடித்தல் வேண்டும்.<br>5. ஆசிரியர் இரு நாட்களுக்கு முன்பாகவே மாணவர்களிடம் இதற்குரிய குறிப்புகள் தர வேண்டும் |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் தண்டில் உணவைச் சேமிக்கும் தாவரம் எவை, வேரில் உணவைச் சேமிக்கும் தாவரம் எவை என்பதையும், அவற்றின் பண்புகள் பற்றியும் அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | தன்னை அறிதல் திறன் வளர்கிறது |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வண்ண வண்ணத் தோட்டம்** |
| 2. | செயல் 2 | : | பக்கம் 164 குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 30 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | சோதனை செய்தல் |
| 6. | நோக்கம் | : | வேர் வழியாக நீர் செடியின் மற்ற பாகங்களுக்குச் செல்கிறது என்பதை அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | சிவப்புமை, தும்பை செடி, சீசா, நீர் |
| 8. | செய்முறை | : | 1. மூன்று மாணவர்களைக் கொண்ட குழுக்களை உருவாக்க வேண்டும் |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| | | | 2. தும்பைச்செடியை வேரோடு (மண் நீக்கி) பாதி அளவு நீர் நிரப்பப்பட்ட கண்ணாடி (அ) நெகிழி சீசாவில் வைக்க வேண்டும்<br>3. நீரில் சில சொட்டு சிவப்பு மையை சேர்த்து ஏற்படும் மாற்றத்தை உற்றுநோக்கிப் பதிவு செய்தல் வேண்டும்.<br>4. சோதனைக்கு முன் (மை சேர்ப்பதற்கு முன்பு) சோதனைக்கு பின் (மை சேர்ப்பதற்கு பின்பு) செடியில் உள்ள மாற்றம்– அறிதல் |
| 9. | செயல் முடிவு | : | சோதனையின் முடிவில் செடியில் சிவப்பு மை பரவி உள்ளதால், செடியின் மற்ற பாகங்களுக்கு வேர் வழியாக நீர் செல்கிறது என அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | தன்னை அறிதல் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வண்ண வண்ணத் தோட்டம்** |
| 2. | செயல் 3 | : | குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 3 நாட்கள் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | செயல்திட்டம் |
| 6. | நோக்கம் | : | கனிகள், வெவ்வேறு தோற்றத்தில், அளவில், சுவையில் வண்ணத்தில் உள்ளன என்பதை அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | ---------- |
| 8. | செய்முறை | : | ஆசிரியர் கொடுக்கவேண்டிய வழிகாட்டுதல்<br>அ) உன்னுடைய வீட்டின் '(அ) பள்ளியின் (அ) அருகாமையில் உள்ள பழங்கள் விற்கும் கடையைப் பார்வையிட வேண்டும்<br>ஆ) அச்சமயம் கீழ்க்கண்ட கேள்விகளுக்கான விடைகளைத் தேட வேண்டும்.<br>கேள்விகள்<br>1. நீ பார்த்த பழங்களின் பெயர் என்ன ?<br>2. அதன் சுவை எப்படியிருந்தது ?<br>3. வண்ணம் என்ன ?<br>4. இலேசானதா அல்லது கனமானதா ?<br>5. மிருதுவானதா அல்லது கடினமானதா ?<br>6. சிறியதா அல்லது பெரியதா ?<br>7. விலை என்ன ?<br>சேகரித்த தகவல்களை மாணவர்கள் அட்டவணையாக / கவிதையாக / கதையாக / கட்டுரையாக / அறிக்கையாகத் தயாரித்து வகுப்பறையில் வழங்குதல் வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | பள்ளியின் அருகாமையில் கிடைக்கும் பழங்களைத் தவிர வேறு பழங்கள் தேவைப்படின் படங்களைப் பயன்படுத்தலாம். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 10. | வாழ்வியல் திறன் | : | முடிவெடுக்கும் திறன், மாணவர்களிடையே வளர்கிறது. |

**பாடம் 2**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள்** |
| 2. | செயல் 4 | : | குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | மாதிரி செய்து கற்றல் |
| 6. | நோக்கம் | : | மீன் நீரில் நீந்த பயன்படுத்தும் பாகங்களும் அதன் செயலையும் அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | வரைபடத்தாள், கெட்டியான நூல் |
| 8. | செய்முறை | : | இச்செயல்பாட்டிற்கு ஓரிரு நாட்கள் முன்பாக ஆசிரியர் மாணவர்களை இரு குழுவாக பிரிக்க வேண்டும்<br><br>ஆசிரியர் துணையோடு மீன் போன்ற உருவத்தை வரைபடத்தில் வெட்ட வேண்டும்.<br><br>0 என குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மீனின் உருவத்தை வெட்டி கெட்டியான நூலால் இணைக்க வேண்டும். இப்போது பாகங்கள் நகரும் தன்மையில் இருக்கும்.<br><br>குழுவில் இருக்கும் மாணவர்கள் ஒவ்வொருவராக பக்கத் துடுப்பு, வால் துடுப்பு ஆகிய பாகங்களை நகர்த்திக் காண்பித்து ஒவ்வொன்றின் பெயர், அதன் செயலையும் அந்தக் குழுவில் உள்ள மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.<br><br> |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் மீனின் பக்கத் துடுப்பு, வால் துடுப்பு ஆகிய பாகங்கள் மற்றும் அதன் பண்புகளை அறிந்துகொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள்** |
| 2. | செயல் 5 | : | தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | ஒரு வாரம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | துணுக்குப் புத்தகம் தயாரித்தல் |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 6. | நோக்கம் | : | தாவர உண்ணி, விலங்கு உண்ணி, அனைத்துண்ணிகள் எவை ? என்று கண்டறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | படங்கள் |
| 8. | செய்முறை | : | ஆசிரியர் மாணவர்களுக்குப் படத்தொகுப்பு செய்வதற்குரிய வழிகாட்டுதல் வழங்க வேண்டும்<br>1. தாவர உண்ணிகள், விலங்கு உண்ணிகள், அனைத்துண்ணிகள் படங்களைச் சேகரிக்க வேண்டும்<br>2. அவற்றைப் பற்றிய தகவல்கள் கிடைத்தாலும் சேர்க்கலாம்<br>3. இம்மூன்று வகையான உண்ணிகளை படத்தொகுப்பாக மாணவர்கள் செய்து சமர்ப்பிக்க வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | தாவர உண்ணிகள், விலங்கு உண்ணிகள் மற்றும் அனைத்துண்ணிகளை அறிந்து கொள்கின்றனர். |
| 10. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களிடையே படைப்பாற்றல் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நம்மைச் சுற்றியுள்ள விலங்குகள்** |
| 2. | செயல் 6 | : | தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 2 நாட்கள் (விடுமுறை நாட்கள்) |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | செயல் திட்டம் |
| 6. | நோக்கம் | : | சூழலில் பறவைகளின் கால் மற்றும் அலகுகளின் அமைப்பை அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | தானியங்கள் |
| 8. | செய்முறை | : | 1. மாணவர்கள் சிறிது தானியங்களை வீட்டின் முன்போ தோட்டத்திலோ இறைத்து விட வேண்டும்<br>2. சிறிது தூரத்தில் அமர்ந்து தானியங்களை உண்ண வரும் பறவைகளை குறுக்கீடு செய்யாமல் உற்றுநோக்கவேண்டும்<br>3. பறவைகளின் கால் மற்றும் அலகுகளை உற்றுநோக்கவேண்டும்<br>4. பறவைகளின் பெயர்களைக் கண்டறிய வேண்டும்.<br><br>பறவைகளின் பெயரை எழுதி, அவற்றின் கால்களை, அலகுகளை வரையவேண்டும் அல்லது அவற்றின் படங்களை சேகரிக்க வேண்டும் அல்லது புத்தகத்தில் உள்ள பொருத்தமான விளக்கத்தை எழுத வேண்டும் இந்த தொகுப்பைச் சமர்ப்பிக்கவேண்டும். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 9. | செயல் முடிவு | : | சூழலில் உள்ள பறவைகளின் கால் மற்றும் அலகுகளின் அமைப்பை அறிந்து கொள்கின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் பறவைகளின் கால் மற்றும் அலகுகளை படத்தின் மூலமோ அல்லது மாதிரி மூலமாகவோ மீளாய்வு செய்யவேண்டும். |
| 11 | வாழ்வியல் திறன் | : | மாணவர்களிடையே படைப்பாற்றல் திறன் வளர்கிறது. |

**பாடம் 3**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **தோட்டத்தில் சிறு உயிரினங்கள்** |
| 2. | செயல் 7 | : | தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 2 நாட்கள் (விடு முறை நாட்கள்) |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்றுநோக்கல் |
| 6. | நோக்கம் | : | சூழலில் உள்ள பூச்சிகள் பற்றியும் அவற்றின் இருப்பிடம் பற்றியும் அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | -------- |
| 8. | செய்முறை | : | 1. மாணவர்கள் அவர்களின் சூழலில் உள்ள பூச்சிகளை காலையில் மற்றும் மாலையில் உற்று நோக்க வேண்டும்<br>2. அந்தப் பூச்சிகள் எந்தக் குறிப்பிட்ட இடங்களில் காணப்படுகிறது என்பதை உற்று நோக்க வேண்டும். (எகா. வீடு, தோட்டம், மண்.)<br>3. அவற்றின் நிறம், அளவுகளை உற்று நோக்கவேண்டும்<br>4. அவற்றைக் கீழ்க்கண்ட அட்டவணையில் பதிவு செய்யவேண்டும் |

| தேதி | பூச்சியின் பெயர் | ஊர்வன / பறப்பன | பார்த்த இடம் | நிறம் | அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

| | | | |
|---|---|---|---|
| 9. | செயல் முடிவு | : | சூழலில் உள்ள பூச்சிகள் பற்றியும் அவற்றின் இருப்பிடம் பற்றியும் அறிந்து கொள்கின்றனர். |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் மாணவர்கள் சேகரித்த தகவல்களைத் தொகுத்து வகுப்பறையில் வழங்க வேண்டும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **தோட்டத்தில் சிறு உயிரினங்கள்** |
| 2. | செயல் 8 | : | பக்கம் 184 தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 1 வாரம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | படத்தொகுப்பு தயாரித்தல் |
| 6. | நோக்கம் | : | தன்சூழலில் உள்ள மனிதர்களுக்கு உதவும் உயிரிகள் பற்றி அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | படங்கள் |
| 8. | செய்முறை | : | 1. மனிதனுக்கு உதவும் சூழலில் உள்ள சிறு உயிரிகளை மாணவர்கள் அடையாளம் காண வேண்டும்<br>2. அந்தக் குறிப்பிட்ட உயிரினங்களின் படங்களை மாணவர்கள் சேகரிக்க வேண்டும் அதன் பெயர்களைக் கண்டறியவேண்டும்<br>3. அப்படங்களைக் கொண்டு படத்தொகுப்பு தயாரிக்கவேண்டும்<br>4. மாணவர்கள் படத்தொகுப்பைச் சமர்ப்பிக்க வேண்டும். (ஆசிரியர் மேற்காண் குறிப்புகளை ஒரு வாரம் முன்பு வழங்கி தொடந்து அச்செயல் நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்) |
| 9. | செயல் முடிவு | : | சூழலில் உள்ள மனிதனுக்கு உதவும் உயிரிகளை அடையாளம் கண்டு அறிந்து கொள்கின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் சிறு உயிரிகளின் படங்களைக் காண்பித்து மாணவர்கள் உற்று நோக்கியதோடு ஒப்பிட்டு அவற்றை பற்றி விளக்கவும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **தோட்டத்தில் சிறு உயிரினங்கள்** |
| 2. | செயல் 9 | : | தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 2 நாட்கள் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்றுநோக்கல் பதிவேடு |
| 6. | நோக்கம் | : | சூழலில் உள்ள சிறு உயிரிகளின் உணவைப்பற்றி அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | -------- |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 8. | செய்முறை | : | 1. மாணவர்கள் தன் சூழலில் உள்ள ஈ, எறும்பு,பல்லி,சிலந்தி மற்றும் கொசு ஆகியவற்றின் உணவு என்ன என்பதைக் கண்டறிதல்<br>2. கண்டறிந்தவற்றைப் பதிவேட்டில் எழுதுதல்<br>3. பதிவேட்டை வகுப்பில் சமர்ப்பித்தல் எ.கா.<br><br>உயிரி – உணவு<br>பெண் கொசு – இரத்தம் |
| 9. | செயல் முடிவு | : | சிறு உயிரிகளின் உணவை பற்றி அறிந்து கொள்கின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் மாணவர்களிடம் உயிரிகளின் உணவு படத்தைக் காட்டித் தொகுத்து வழங்கவும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | தன்னைப் பிறர் நிலையில் வைத்துப் பார்க்கும் திறன் வளர்கிறது |

**பாடம் 4**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வன உலா** |
| 2. | செயல் 10 | : | குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | மாதிரி உருவாக்கம் |
| 6. | நோக்கம் | : | காட்டில் வாழும் உயிரினங்களை அறிந்து கொள்ளுதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | மரங்கள், செடிகள் மற்றும் விலங்குகளின் வெட்டுருக்கள் |
| 8. | செய்முறை | : | ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகள் சிலவற்றை வெட்டுருக்களாகச் செய்தல். வகுப்பறையின் மூலையில் அவற்றைக் கொண்டு காட்டின் மாதிரியை உருவாக்குதல். (ஆசிரியரின் நேரடிப் பார்வை அவசியம்) |
| 9. | செயல் முடிவு | : | காட்டில் வாழும் உயிரினங்களை அறிந்து கொள்ளுகின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் கதைமூலம் காட்டில் உள்ள விலங்குகளைப் பற்றி வகுப்பறையில் விளக்கவும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **வன உலா** |
| 2. | செயல் 11 | : | தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 45 நிமிடம் |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | பங்கேற்று நடித்தல் |
| 6. | நோக்கம் | : | காடுகள் மற்றும் காட்டில் வாழும் உயிரினங்கள் அழிக்கப்படுவதையும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் உணரச்செய்தல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | முகமூடிகள் |
| 8. | செய்முறை | : | ஒவ்வொரு மாணவரையும் ஒவ்வொரு விலங்கின் முகமூடியை அணிந்து கொள்ளச் செய்தல். மனிதர்கள் அவர்களின் தேவைக்காக விலங்குகள் மற்றும் காடுகளை அழிப்பதை பங்கேற்று நடித்தல் மூலம் விளக்கச் செய்தல் ( எ. கா. யானை முகமூடி அணிந்து என்னை மனிதர்கள் அழிப்பது என் தந்தத்திற்கு என்று கூறுதல்) |
| 9. | செயல் முடிவு | : | மனிதரின் தேவைக்காக காடுகள் மற்றும் காட்டில் வாழும் விலங்குகள் அழிக்கப்படுவதை உணர்கின்றனர். |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் காடுகள் மற்றும் அவற்றில் வாழும் உயிரினங்கள் அழிக்கப்படுவதை பற்றி வேறு எடுத்துக்காட்டுகள் (புலி) மூலம் விளக்கவும். |
| 11. | வாழ்வியல் திறன் | : | படைப்பாற்றல் திறன், தன்னிலை அறிதல் ஆகிய திறன்கள் வளர்கின்றன. |

**பாடம் 5**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நமக்குள்ளே** |
| 2. | செயல் 12 | : | தனிச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 10 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | சோதனை செய்தல் |
| 6. | நோக்கம் | : | தொட்டு உணர்தல் மூலம் தோலின் செயல்பாட்டை அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | வழவழப்பான காகிதம், அட்டை, உப்புத்தாள், பென்சில், கல், இரப்பர், பூ |
| 8. | செய்முறை | : | 1. மேற்கூறிய பொருட்களை ஒரு காகிதப் பையில் போட்டுவைக்கவேண்டும்<br>2. ஒவ்வொரு மாணவராக அந்தப் பொருளைக் கண்ணை மூடி தொட்டுப்பார்த்து அப்பொருள் என்ன என்பதை கூறவேண்டும்<br>3. எல்லாப் பொருட்களையும் மாணவர்கள் அடையாளம் கண்ட பின் ஆசிரியர் அப்பொருளை காண்பித்து அப்பொருள் என்ன என்பதை அறிவிக்கவேண்டும்<br>4. கண்ணை மூடியும் அப்பொருளை அடையாளம் காண முடிந்தது எந்த உணர்வு மூலம் என்பதை மாணவர்களிடம் ஆசிரியர் விளக்கவேண்டும். |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 9. | செயல் முடிவு | : | தொடு உணர்வு தோலின் மூலம் ஏற்படுகிறது என்பதையும் தொடு உணர்வின் மூலம் பொருட்களை அடையாளம் காண முடியும் என்பதையும் அறிந்து கொள்கின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | மேற்கூறிய பண்புகளையுடைய பொருட்களை ஆசிரியர் காண்பித்து விளக்கவும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களிடையே கூர் சிந்தனை திறன் வளர்கிறது |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நமக்குள்ளே** |
| 2. | செயல் 13 | : | குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 15 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | உற்றுநோக்கல் |
| 6. | நோக்கம் | : | மாணவர்கள் மனிதனின் உடம்பிலுள்ள மூட்டுகள் எங்குள்ளன அவற்றின் செயல் என்ன என்பதை அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | ------------- |
| 8. | செய்முறை | : | 1. மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்<br>2. ஒரு குழுவில் உள்ள மாணவர்கள் சைக்கிள் ஓட்டுதல், பந்து எறிதல், பந்து பிடித்தல், கைப் பம்பு அடித்தல், ஆட்டோ ஓட்டுதல், நடனம், கிரிக்கெட் விளையாடுதல், பனங்காய் வண்டி ஓட்டுதல், மற்றும் சம்மணம் போட்டு அமர்தல் போன்ற செயல்களை ஒவ்வொன்றாக செய்து நடித்துக் காண்பிக்க வேண்டும்<br>3. அடுத்த குழுவில் உள்ள மாணவர்கள் அம்மாணவர்கள் செய்த செயல் என்ன என்பதையும் அச்செயலில் என்ன மூட்டு பயன்படுத்தப்பட்டது என்பதைக் கூ ற வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் மனித உடம்பில் மூட்டுக்கள் எங்குள்ளது என்பதையும் அவற்றின் செயல்பாடுகளையும் அறிந்து கொள்கின்றனர். |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர், ஒவ்வொரு எலும்பு மூட்டு பற்றி படங்கள் வாயிலாகவும், கரும்பலகையில் வரைந்தும், மாணவர்கள் கற்றதோடு தொடர்புபடுத்தி விளக்கவும். |
| 11 | வாழ்வியல் திறன் | : | மாணவர்களிடையே கூர்சிந்தனை வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **நமக்குள்ளே** |
| 2. | செயல் 14 | : | குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 20 நிமிடம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | பொம்மலாட்டம் |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 6. | நோக்கம் | : | மனிதனின் பற்களைப் பற்றி அறிதல் |
| 7. | தேவையான பொருள் | : | பற்களின் வெட்டுருக்கள் |
| 8. | செய்முறை | : | 1. மாணவர்களை 4 குழுக்களாகப் பிரிக்க வேண்டும்<br>2. ஒவ்வொரு குழுவும் கோரைப் பல், கடைவாய் பல், முன்கடைவாய்ப்பல் மற்றும் வெட்டும் பல் ஆகியவற்றின் ஒரு வெட்டுருவை எடுத்துக் கொள்ள வேண்டும்.<br>3. ஒவ்வொரு குழுவில் இருந்து ஒருவர் வந்து அந்த பல் எங்குள்ளது அதன் செயல் என்ன என்பதை கூறவேண்டும்.<br>4. ஆசிரியர் இறுதியில் தொகுப்பாகக் கூறவேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மனிதப் பற்கள் எத்தனை வகை என்பதையும் அதற்குரிய செயல்களையும் மாணவர்கள் அறிந்து கொள்கின்றனர். |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | மாணவர்களை அவர்கள் வாயில் உள்ள பற்களைத் தொட்டு உணரச்செய்து, அதைக் கற்றலோடு தொடர்பு படுத்தி ஆசிரியர் விளக்கவும். |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் தகவல் தொடர்பு திறன் வளர்கிறது |

**மதிப்பீட்டு செயல் வழிகாட்டி வகுப்பு 4 பாடம் 1**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **உண்ணத் தருவேன்** |
| 2. | செயல் 1 | : | பக்கம் 153 குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 3 நாட்கள் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | படத்தொகுப்பு |
| 6. | நோக்கம் | : | உணவாகும் தாவர பாகங்களை அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | சார்ட், காய்கள், கீரைகள், பழங்களின் படங்கள், பசை |
| 8. | செய்முறை | : | 1. ஆசிரியர் உணவாகும் தாவர பாகங்களைப் பற்றி விளக்கிக் கூறவேண்டும்<br>2. மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்கவேண்டும்<br>3. முதல் குழுவிற்கு இலைகள், தண்டுகள் இரண்டாம் குழுவிற்கு பழங்கள், வேர்கள் என்ற தலைப்புகளைக் கொடுத்து அதற்குரிய படங்களை, சார்ட்டில் ஒட்டச்சொல்ல வேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | உணவாகும் தாவர பாகங்களைப் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்கின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் உண்மைப் பொருட்களைக் காண்பித்து விளக்கவும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களின் படைப்பாற்றல் திறன் வளர்கிறது |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **உண்ணத் தருவேன்** |
| 2. | செயல் 2 | : | பக்கம் 156 குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 1 வாரம் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | சோதனை செய்து கற்றல் |
| 6. | நோக்கம் | : | விதை முளைக்கத் தேவையான காரணிகளை அறிந்து கொள்ளுதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | ஒரே அளவிலான 4 கண்ணாடிக் குவளைகள், அவரை விதைகள், பஞ்சு,நூல் மற்றும் கருப்புத் துணி |
| 8. | செய்முறை | : | 1. ஒரே அளவிலான 4 கண்ணாடிக் குவளைகளையும், அவரை விதைகளையும் மாணவர்களைச் சேகரிக்கச் சொல்லுதல்.<br>2. மாணவர்களை 4 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு கண்ணாடி குவளையைக் கொடுத்து, அதில் ஒரே அளவிலான அவரை விதைகளைப் போடச் சொல்லவேண்டும்<br>3. ஒரு குவளைக்கு நீர், இரண்டாவது குவளைக்கு காற்று, மூன்றாவது குவளைக்கு சூரிய ஒளி கிடைக்காதவாறு வைக்கச் சொல்ல வேண்டும். நான்காவது குவளைக்கு நீர், காற்று, சூரிய ஒளி கிடைக்கும்படி வைக்கச் சொல்லவேண்டும்<br>4. உற்றுநோக்கியதை மாணவர்கள் ஒவ்வொரு குழுவாக வந்து ஆசிரியரிடம் கூறவேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | விதை முளைக்க நீர், காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற காரணிகள் தேவை என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்கின்றனர் |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் விதை முளைக்கத் தேவையான அனைத்துக் காரணிகளையும் தொகுத்து விளக்கவும் |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களுக்கு முடிவெடுக்கும் திறன் வளர்கிறது |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **உண்ணத் தருவேன்** |
| 2. | செயல் 3 | : | பக்கம் 158 குழுச்செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 1 நாள் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | களப்பயணம் |
| 6. | நோக்கம் | : | தாவரங்களின் பயன்களை அறிதல் |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 7. | தேவையான பொருட்கள் | : | மாணவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடி நீர் |
| 8. | செய்முறை | : | 1. ஆசிரியர் மாணவர்களைக் களப்பயணம் அழைத்துச் செல்ல திட்டமிடுதல் வேண்டும் பின்பு தலைமை ஆசிரியரிடம் அனுமதி பெற வேண்டும்.<br>2. களப்பயணமாக செல்லும் இடத்தில் இருக்கும் மரம், செடிகளை மாணவர்களுக்கு அடையாளம் காட்டவேண்டும்<br>3. மருத்துவ குணமுள்ள தாவரங்கள், வீடுகட்ட பயன்படும் தாவரங்கள், விழாக்களின் போது பயன்படும் தாவரம் ஆகியவற்றை மாணவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும்.<br>4. மாணவர்களை குழுக்களாகப் பிரித்து கலந்து உரையாடச் செய்யவேண்டும்.<br>5. குழுத் தலைவன் தாங்கள் கலந்துரையாடியவற்றை ஆசிரியரிடம் எழுதிச் சமர்ப்பிக்கவேண்டும். |
| 9. | செயல் முடிவு | : | மாணவர்கள் தாவரங்களின் பயன்களை அறிந்து கொள்கின்றனர். |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | மாணவர்கள் குழுவில் கலந்துரையாடியதை ஆசிரியர் தொகுத்து மாணவர்களுக்கு வழங்கவும். |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்கள் குழுவில் பங்கேற்கும் திறன் வளர்கிறது |

**பாடம் 2**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **விலங்குகளின் சிறப்பு புலன் உணர்வுகள்** |
| 2. | செயல் 4 | : | பக்கம் 171 தனிநபர்ச் செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 3 நாட்கள் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | செயல் திட்டம் |
| 6. | நோக்கம் | : | இளம் உயிரி பாதுகாப்புப் பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்ளுதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | பேப்பர், பேனா, படங்கள் |
| 8. | செய்முறை | : | 1. மாணவர்கள் குழந்தையாகப் பிறந்ததிலிருந்து 8 வயது வரை, பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட விதத்தை ஆசிரியர் விளக்க வேண்டும்.<br>2. பாடப் புத்தகத்தில் உள்ள விலங்கினங்களில், கோழி, முயல், கங்காரு ஆகியவற்றில் உள்ள இளம் உயிரி பராமரிப்புப் பற்றி விளக்கமளிக்க வேண்டும்.<br>3. பெற்றோர்களிடம் மாணவர்கள் கேட்டறிந்து, இளம் உயிரி பாதுகாப்புப் பற்றிய படங்கள் சேகரித்து ஒட்டி ,அவற்றின் கீழே சிறுகுறிப்பு எழுதி மூன்று நாட்களில் ஒப்படைக்கச் சொல்லவும் . |



www.TeacherTN.com

| | | | |
|---|---|---|---|
| 9. | செயல் முடிவு | : | இளம் உயிரிகளை அவற்றின் பெற்றோர்கள் எவ்வாறெல்லாம் பாதுகாக்கின்றனர் என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்கின்றனர். |
| 10 | குறைதீர் நடவடிக்கை | | ஆசிரியர் மாணவர்களின் குறிப்புகளை தொகுத்து வழங்கவும். |
| 11. | வாழ்வியல் திறன் | : | மாணவர்களுக்கு தன்னை பிறர் நிலையில் வைத்து பார்க்கும் திறன் வளர்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடத் தலைப்பு | : | **விலங்குகளின் சிறப்பு புலன் உணர்வுகள்** |
| 2. | செயல் 5 | : | பக்கம் 174 தனிநபர்ச் செயல்பாடு |
| 3. | மதிப்பெண் | : | 10 |
| 4. | கால அளவு | : | 1 நாட்கள் |
| 5. | கற்றல் மதிப்பீட்டு முறை | : | கை வேலை |
| 6. | நோக்கம் | : | விலங்குகளின் சிறப்பு புலன் உணர்வுகளை அறிதல் |
| 7. | தேவையான பொருட்கள் | : | பல வண்ணக் காகிதம், அளவுகோல், பேப்பர் பென்சில், ரப்பர் |
